திங்களிதழ் விலை 6 காசுகள்

# தமிழ்ப்பாவை

மதுரை எழுத்தாளர் மன்ற வெளியீடு.

மலர் 2 | திருவள்ளுவராண்டு 1993 மார்கழி 23 (7—1—63) | இதழ் 1

## பச்சை

### அறிமுகம்

பச்சை நிறம்பாடப் பாய்ந்துவரும் மானென்றிங்
கிச்சையுடன் கேட்டுள்ளம் இன்புறுக—மெச்சுதமிழ்
அன்புள்ள கல்விமான் அப்துல் ரகுமானும்
பண்புடையார் பாடிடுவார் பாட்டு

—கவிஞர் முடியரசன்

கலையெழுத்தால் சுவையான கையெழுத்தால் தமிழ்த்தாயின்
தலையெழுத்தை வரைகின்ற தமிழ்எழுத் தாளர்தம்
மன்றத்தின் காவலரே! மணித்தமிழின் காவலரே!
நின்று நெடுங்காலம் நிலைக்கஎன வாழ்த்துகிறேன்.

அதிகமான் அளித்த கனிதின்றார் அவ்அவ்வை
அதிகமாண வர்க்குஅறிவுக் கனிகொடுத்தார் இவ்அவ்வை
சீமைத் துரைபோலச் செப்பிடுவார் ஆங்கிலமும்
சாமி இவர்பெருமை சாற்ற முடிந்திடுமோ?

ஏடே திருநாடாய் எழுதுகோல் செங்கோலாய்
நீடு புகழ்த்தமிழர் நெஞ்செல்லாம் அரசாளக்
குடியில்லாக் குடியரசு கோலோச்சும் காலத்தில்
முடியில்லா முடியரசாய் முகிழ்த்தவரே! வணங்குகின்றேன்.

பால்வருணத் துடன்நஞ்சுப் பகைவருணம் கலப்பதுபோல்
மேல்வருணக் கீழ்வருண வேற்றுமைகள் காட்டுகின்ற
நால்வருணக் கொடுமைக்குப் பாடைகட்டும் நாட்களிலே
நால்வருணம் பற்றிநமைப் பாட்டைக்கட்டி வரச்சொன்னார்

வேலுக்கும் குருதிக்கும் மிகத்தொடர்பு உண்டென்று
வேலவர்க்குச் சிவப்புநிறம் விருப்போடு தந்துவிட்டார்

---

**மன்றக் கவியரங்கில் கவிஞர் அப்துர் ரகுமான், எம். ஏ.,**

கறுப்போடு தொடர்புடைய கவிஞர்க்கும் கறுப்பளித்தார்
மறக்காமல் மஞ்சளையோர் மங்கைக்குக் கொடுத்துவிட்டார்
என்ன பொருத்தத்தை எண்ணியோ பச்சையெனும்
எண்ணத்தை எனக்கு வழங்கிவிட்டார் நான்தான்
பச்சை நிறம்பற்றிப் பாட்டெழுதச் சரியான
பச்சைப் பயலென்று பார்த்துப் பிடித்தாரோ?
ஏதோ அறியேன்நான்; இருந்தாலும் பச்சையெனும்
தீதற்ற வண்ணத்தைத் தீட்டத் தொடங்குகின்றேன்

மாற்றமிலா நிறம்பச்சை; மற்ற நிறம்பற்றிச்
சாற்றத் தொடங்கிவிட்டால் சாயம் வெளுத்துவிடும்!
சிவப்புநிறம் ஆபத்தின் சின்னம்; கறுப்புநிறம்
கவலையையும் துயரினையும் காட்டுகின்ற அடையாளம்
பஞ்சமென்ன வந்ததோ! பதும மலர்முகத்தில்
மஞ்சளுக்கு மாறாக வஞ்சியர்கள் நாள்தோறும்
அஞ்சாறு முறைமாவு அப்புமிந்தக் காலத்தில்
மஞ்சளுக்கும் மகிமையில்லை; பழைய மதிப்பில்லை

பச்சைநிறம் இன்பத்தைப் பாய்ச்சும்நிறம் எல்லோர்க்கும்
இச்சைநிறம் வளமைக்கும் இளமைக்கும் அடையாளம்
கண்ணுக்குக் குளிர்ச்சி கருத்திற்கு மகிழ்ச்சி
எண்ண எழிலுக்கு எழில்கூட்டும் நல்லநிறம்
நீலனுக்கும் மஞ்சள் நேரிழைக்கும் கலப்புமணக்
கோலத்தில் பிறந்துவந்த குழந்தைதான் பச்சைநிறம்
இயற்கையெனும் ஓவியனுக்கு இனியநிறம் பிடித்தநிறம்
வயல்வெளியைப் புல்வெளியை மரயிலையை காய்க்குலையை

எல்லாம் பசுமையால் இயற்றிவைத்தான் உலகத்தில்
எல்லா நிறங்களிலும் இந்தநிறம் தானதிகம்
சிவப்புக் கமலப்பூ கறுப்புக் குவளைப்பூ
செவந்தி எனும்மஞ்சள் சித்திரப்பூ எல்லாமே
ஆவலுடன் தாலாட்டி ஆதரிக்கும் பச்சைத்
தாவரங்கள் பெற்றெடுத்துத் தவழவிட்ட குழந்தைகள்தான்
பூவண்ணம் தளிர்வண்ணம் புதுவண்ண இலைவண்ணம்
காய்வண்ணம் சுவையூறும் கனிவண்ணம் பலஎனினும்

தாய்வண்ணம் பச்சைவண்ணம் தவிர்ந்தபிற வண்ணமெலாம்
சேய்வண்ணம் என்றுநான் செப்பிஞல் வியப்புண்டோ?
பூதலத்தி லேவந்து பூத்த நிறத்தையெலாம்
ஆதரிக்கும் நிறம்பச்சை ஆதார நிறம்பச்சை
மஞ்சள் உடையணிந்த மணிவெள்ளை அரிசிப்பெண்
நஞ்சை வயற்பச்சை நாற்றுக்கு மகளன்றோ?
இயற்கையிலே சிவப்பாக இருக்கின்ற உதடுகளை
செயற்கைச் சிவப்பாலே மேலும் சிவப்பாக்க

நிச்சயித்த பின்னர் நேயமுடன் தேடுவது
பச்சைவெற் றிலைதானே! பசுமையின்றேல் சிவப்பேது
பஞ்ச நிலைதன்னைப் பளிச்சென்று காட்டுதற்கு
மஞ்சள்கா கிதம்தன்னை மனிதர் கொடுப்பதெல்லாம்

தமிழ்ப்பாவை

மலர் 2 இதழ் 1

# இரண்டாம் ஆண்டு

"பாவை" வலிவுடனும் பொலிவுடனும் இரண்டாம் ஆண்டுப் பயணத்தை இன்று தொடங்குகின்றது. எழுத்தாளர்களின் நலனுக்காகவும், தமிழ் வளர்ச்சிக்காகவும் தன் பணியைச் செவ்வனே செய்து நடைபோட்டு வருகின்றது. எழுத்தாளர்களின் இதயத்திலே நம் "பாவை" தனி இடம் பெற்று ஒளி பெற்று வீசுகின்றது. வெறும வண்ணப்படங்களும், பொருளற்ற கதைகளும் இலக்கணம் இல்லாப் பாடல்களும் புனையப்பட்டு வெளிவரும் இன்றைய பத்திரிக்கை உலகிலே "தமிழ்ப்பாவை" தனி இடம் பெறுகிறதென்றால், இவ்வளர்ச்சி எளிதான செயல் அல்ல. வெறும் வணிக நோக்குடன் "பாவை" வெளிவரவில்லை. தனிப்பட்டோர் உயர்வுக்கு வழிதேட கிஞ்சித்தேனும் இல்லை, நல்ல தமிழ், நல்ல தமிழ் என்ற சத்தான கொள்கைக்கு வித்தாக வெளி வருகின்றது. இதழுக்கு இதழ் விற்பனை எண்ணிக்கை மிகுதி. வெளி நாட்டிலிருந்தெல்லாம் வாழ்த்துக்கள் வந்த வண்ணமாகயிருக்கின்றன. குறைந்த விலையில் நிறையப் பக்கங்கள் போடவிருப்பம். எழுத்தாளர்கள் முயன்று உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தினால் முடியாதது உண்டோ! தமிழ் மணக்க அம்முயற்சி வெல்க!

பு. மகேசன்



பைந்தமிழ்ப் பாவலர் அ. கி. பரந்தாமனார்

# கருத்தரங்கு

ஒரு பொருளைக் குறித்துப் பல்வேறு கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு இடமாக இருப்பது கருத்தரங்கமாகும், இந்நாளில் கருத்தரங்கு தேவைப்படுவது குறித்து நீளமாக விளக்க வேண்டுவதில்லை. இதன் பயனைப் பலரும் நன்கறிவர். ஆதலால், நமது தமிழ்ப்பாவையில் கருத்தரங்கைத் தொடர்ந்து வெளியிடவிரும்புகிறோம்,

இவ்வேட்டில் எழுத்தாளர் யார்? என்பது குறித்துக் கருத்தரங்கு தொடங்குவோம். எழுத்தாளர் மன்றத்திலிருந்து தமிழ்ப்பாவை வெளிவருவதால், இதில் எழுத்தாளர் யார் என்பது பற்றி முடிவு கட்டுவது நன்று. மதுரையில் நடந்த ஒரு மன்றக் கூட்டத்தில் ஓரன்பர் சங்க நூல்களுக்கு உரை எழுதுபவர்களும் பள்ளி மாணவர்களுக்குப் பாடநூல்களை எழுதுகிறவர்களும் எழுத்தாளர்களா? என்று நெஞ்சுரத்தோடு அஞ்சாது வினவினர். வேறு சிலர் நாளிதழில் தலைபங்கம் எழுதும் இதழாசிரியரும், செய்தி திரட்டி எழுதியனுப்புகிறவரும் எழுத்தாளர்கள் என்று மதிப்பதில் தவறில்லை என்கின்றனர். இன்னும் சிலர் நெடுங்கதைகளையும், சிறுகதைகளையும் நாடகங்களையும் எழுதுகிறவர்களே உண்மையில் எழுத்தாளர்களாவார்கள் என்று பன்னனெடுங்காலமாக வற்புறுத்தி வருகிறார்கள். இது குறித்து உங்கள் கருத்தென்ன? தமிழ்ப்பாவையில் வெளியிட ஒரு பக்க அளவில் உங்கள் கருத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதியனுப்புங்கள்.

வீறுகொண்ட எழுத்தால் சீன வீணரை விரட்டுவோம்

மிச்சமாய் பையினிலே மீதமாய் சிறிதேனும்
பச்சைநோட் டில்லாத பரிதாபத் தாலன்றோ?
பேசும் பறவையெனப் பெயர்பெற்ற புகழ்ப்பறவை
ஆசை நினைவுதரும் அழகான மங்கையர்க்கோர்

உவமை தனைத்தேடி ஒருபொருளும் கிடைக்காத
கவிஞர்க்குக் கைகொடுத்த கிளிப்பறவை பச்சைநிறம்
இச்சகத்தில் பறவைகள் எத்தனையோ இருந்தாலும்
பச்சைக் கிளியைப்போல் பாராட்டை யார்பெற்றார்
காக்கைபிடிப் போரும்கரும் காக்கை வளர்ப்பதில்லை
யார்க்கும்செம் போத்ததனை ஆதரிக்கும் நினைவில்லை
மஞ்சள் குருவிகண்டு மக்கள் மகிழ்வதில்லை
அஞ்சுகத்தின் பச்சை அழகுவண்ணம் கண்டன்றோ

வஞ்சியர்கள் எல்லாம் மலர்க்கரத்தில் ஏற்றிவைத்துக்
கொஞ்சுகின்றார் தோழியைப் போல் குலவி மகிழ்கின்றார்
செக்கச் சிவப்புநிறச் சேயிழையா ரானாலும்
மிக்கக் கறுத்திருக்கும் மெல்லியலார் என்றாலும்
கொச்சிமஞ்சள் பூசும்முகக் கோதையர்கள் என்றாலும்
பச்சைப் பட்டாடைஎன்றால் பரவசமாய் அணிந்திடுவார்!
பெண்களுக்குப் பச்சைதான் பிடிக்குமெனக் காட்டுதல்போல்
மண்மகளும் ஆடைகட்டும் மனம்கொண்டு தன்னுடைய

கட்டான மேனியின்மேல் கவினுக அணிகின்ற
பட்டாடை வளர்கின்ற பச்சைப்புல் லாடையன்றோ!
ஆசையுடன் நீர்ப்பெண்ணாள் அணிந்து மகிழ்கின்ற
பாசிப் புடவையும் பச்சை நிறமன்றோ!
நாட்டில் பசுமைவள நலங்கள் இலைஎன்றால்
ஏட்டிலுறும் கறுப்பெழுத்து இலக்கியத்தின் வளமெங்கே?
செங்கோல் சிறப்பதெங்கே? மங்கையர்கள் வாழ்வினிலே
மங்களங்கள் தானெங்கே? மஞ்சள் மெருகெங்கே?

பூவால் உடல்செய்து பொன்னால் மெருகிட்டுப்
பாவால் மொழிசமைத்துப் படைத்த வடிவாகிக்
கனவின் எழிலாகக் கனிவின் நிழலாக
நினைவில் புதுமகிழ்ச்சி நிகழ்த்தி நடைபயின்று
பல்லில்லா வாயாலே பனிமலர்போல் முறுவலித்துச்
சொல்லில்லா மொழியாலே சொல்லாடும் சிறுகுழந்தை
மாநிறமோ கறுப்பு மணிநிறமோ செங்கமலப்
பூநிறமோ எந்தப் புதுநிறமோ ஆனாலும்

பச்சைக் குழந்தையென்று பகர்கின்றோம் பாசமுடன்
உச்சி முகர்ந்தே உளமெல்லாம் சிலிர்க்கின்றோம்
வளமுடைய பச்சையெனும் வார்த்தைக்குப் புதுமைஎன்றும்
இளமைஎன்றும் தெளிவென்றும் எத்தனையோ பொருளுண்டு
பசுமைபற்றி நானுரைத்த பாட்டுங்கள் உள்ளத்தில்
பசுமரத் தாணிபோல் பதிந்திருக்கும் ஆகையினால்
அாரத்துப் பச்சையென்று சொல்லீர் எனத்துணிந்தேன்
நேரத்தைக் கடத்தாமல் நிறுத்தி முடிக்கின்றேன்.

பரிசுப்போட்டியில் முதற்பரிசுபெற்ற சிறுகதை.

# அவலக்குரல்

பு. மு. சாந்தமூர்த்தி

இளமையில் தோன்றும் உள்ளப் போராட்டங்களிடையே தத்தளித்து இடையிடையே காணும் அமைதியை மீண்டும் மீண்டும் இழந்து துன்புற்ற உயிருக்கு 'அவள்' ஓர் எடுத்துக் காட்டு.

உணர்ச்சியின் விரைவால் உணர்வில் திளைத்த இளமை உள்ளம் தன் போராட்டங்களிடையே மிகவும் அல்லற்பட்டு இறுதிவரை நல்வாழ்வுக் கரை சேராமல் அவல முடிவைக் கண்ட உயிருக்கு 'அவன்' ஓர் எடுத்துக்காட்டு. இவ்விரு எடுத்துக்காட்டுகளை 'அவளே' கூறக் கேட்கலாம்.

0 0 0

உடன்பிறந்தார் எவருமில்லை. அன்பு ததும்ப என்னை அக்கா என்றழைப்போரும் இல்லை. அண்டைவீட்டுக் குழந்தைகள் "அக்கா" என்று தங்கள் உடன்பிறந்தாரை அணைத்து மகிழுங்காட்சியைக்காணும்போதெல்லாம் நான் கொள்ளும் வேதனை சொல்லும் தரத்தன்று. பாசத்தால் கட்டுண்டோரின் அன்பைக் காணும் போதெல்லாம் என்னைப் பற்றி எண்ணி எண்ணி நானே விம்மினேன். பெற்றெடுத்த அன்னையே என் நெஞ்சின் கவலையைப் போக்குவார். என் கவலையை மறந்து வாழப் பள்ளி ஆசிரியை வேலையைக் கற்று வேலைக்கும் அமர்ந்தேன், சின்னஞ்சிறு குழந்தைகளின் கள்ளமில்லா முகங்களைக் கண்டு என்னை நானே தேற்றிக்கொள்வேன். செல்வக் குழந்தை, ஏழைக் குழந்தை, சிரித்துக்கொண்டேயிருக்கும் குழந்தை, சிரிப்பை உணர்த்தாத குழந்தை, அமைதியான குழந்தை, துடுக்குத் தனமான குழந்தை எனப் பல்வகைக் குழந்தைகளை என் வகுப்பறையில் நாளும் காணுகின்றேன். காலையில் காணும் குழந்தைகள் மாலையில் பள்ளி முடிந்ததும் விரைவோடு வீடு திரும்பக் காணும்போது என் கண்களில் நீர் தவழ்ந்து கொண்டிருக்கும். தாய்மை உணர்வடையாத தன்மை அடைந்தோமே என்று நாளும் வருந்துவேன்.

வகுப்பில் சிறு குழந்தைகள் புன்முறுவல் பூத்து என்னை நோக்கும்போது எண்ணற்ற கதைகளை உணர்கின்றேன். தாயில்லாக் குழந்தைகள் என்னை 'அம்மா' என்றே அழைத்தன. அந்தச் சொல்லில்தான் எவ்வளவு உணர்ச்சி! எவ்வளவு இன்பம்! இக்குழந்தைகளின் நடுவே இருக்கும்போது வாழ்விழந்தவள் என்று பிறர் தூற்றும் பழிச்சொல்லைப் பற்றிய எண்ணமே எழுவதில்லை. அவ்வப்போது எழும் உணர்ச்சி வெள்ளத்தைப் பெரிதும் முயன்று அடக்கிக் கொள்வேன். பெண்மை அடக்கத்தின் தாய கமல்லவா! நாளும் இதே நிலைமைதான் எனக்கு. நாட்கள் விரைந்தன; மழைக்காலத்துப் பெருவெள்ளம் போல.

ஒருநாள் பள்ளியில் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போதே காற்றடித்துத் தூறல் பிடித்துக்கொண்டது. மறைந்து கொண்டிருந்த கதிரவனும் மேகக் கூட்டங்களில் மறைந்தான். வானத்தின் நிலையை ஆருடம் கணித்த பறவை இனங்கள் தத்தம் இருப்பிடம் நோக்கி விரைந்தன. மழையும் பெய்யத்தொடங்கியது. குடையில்லாத காரணத்தால் அன்று மாலை விடு திரும்பக் காலம் தாழ்ந்தது. சிறு சிறு மழைத்துளிகள் என் உடம்பில் பட்டு ஈரத்தை உண்டாக்கின. அவை, என் உள்ளத்தையும் ஈரமாக மாற்றின, வீடு நெருங்கும் போதே வீட்டில் இருமல் ஒலி கேட்டேன். என்னைக் காண விழைந்தவர்போல் என் தாயார் இருந்தார். முன்பின் பார்த்தறியாத இளைஞர் ஒருவர் தன்னை மறந்து படுத்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். மழையில் நனைந்தவாறே சென்று கொண்டிருந்தவர் நானிருக்கும் வீட்டின் முன் வந்ததும் விழுந்து விட்டாராம்' யாரும் பார்க்கவே இல்லையாம், பிறகுதான் என் அன்னையார் அழைத்துவந்தாராம், என் அன்னையின் இரக்க நெஞ்சும், நெஞ்சில் தோன்றும் நினைவைச் செயலாக்கும் பண்பும் கண்டு மகிழ்ந்தேன், என் தாயல்லவா! இதே தாயின் உள்ளமும் செயல் திறமும் அனைவர்க்கும் அமைந்துவிட்டால்? உலகம் வாழத்தலைப் படுமே.

சிறு மண்ணெண்ணெய் விளக்குக் கண் சிமிட்டிக்கொண்டிருந்தது. உறக்கம் இல்லாமல் நான் படுத்திருந்தேன், ஏழையர் இல்லங்

களில் இவ்விளக்குகள் கண் சிமிட்டிக்கொண்டேயிருக்கின்றன, அவை யாவும் என்னைப் போன்ற பெண்களின் வாழ்க்கையைக் கூறத் தொடங்கினுல் நாவெல்லாம் கேட்டாலும் போதாது, அவ்வளவு நீண்ட அவலமிக்க வரலாறு! உறக்கத்தில் இருந்த அந்த இளைஞரை நோக்கினேன். எதை எதையோ எண்ணி எண்ணிச் சிந்தித்து விடை காணுமல் தவிக்கின்ற முகம் போல் அவரது முகம் இருந்தது. காலையில் அவரைப்பற்றிக் கேட்டுக் கொள்ளலாம் என்று எண்ணி நானும் உறங்கி விட்டேன். உறங்குமுன் என்னுடைய நாட்குறிப்பில் அன்றைய மாலை நிகழ்ச்சிகள் எழுத்துக்களாக இடம் பெற்றன,

காலையில் எழுந்திருந்தவுடன் அவரை நோக்கினேன், அவர் தெரு வாசற்படியில் அமர்ந்து எதையோ எண்ணிக் கொண்டிருந்தார், பல் துலக்கியவாறே எனக்கும் பள்ளிக்கு நேரமாகிவிடவே அம்மாவிடம் அவரை பார்த்துக்கொளுமாறு கூறிச்சென்றேன், அன்று முழுதும் பாடத்தில் என் எண்ணம் செல்லவில்லை. அவர் ஏன் ஒன்றும் பேசவில்லை என்று மட்டும் எண்ணிக்கொண்டிருந்தேன், ஒருவாறு பள்ளி முடிந்ததும் மாலை வீடு திரும்பினேன், என் வரவை வேண்டுவது போல் அவர் முகம் இருந்தது. சிறு புன்முறுவல்! உடனே மறைந்து விட்டது. நான் உள்ளே சென்று முகம் கழுவி சிறிது வேளையில் வெளியே வந்தேன்; ஏமாற்றம்! அவர் இல்லை. மனக்கவலையின் விளைவால் இந்த நிலையை எய்தியதாதத் தன்னிடம் அவர் கூறியதாக என் அன்னை கூறவே, என் நிலை தான் இவருக்குமா என்று எண்ணி வருந்தினேன். உணர்ச்சிகளின் நடுவே, இந்த இளமையில் போராடும் அவர் நிலையை எண்ணினேன்; உணர்ச்சிக்குத் தோற்றுத் தத்தளிக்கும் என் நிலையும் எண்ணினேன், இளம் உள்ளங்களின் வாழ்வே இத்தகைய நிலையில் தான் அடங்குகிறதா என்று ஐயுற்றேன்.

இரவு, நூலொன்று படித்துக்கொண்டிருந்தேன். அவர் என்பின் வந்தார் என்பதை அறியேன். அவரைக் கண்டவுடன் 'அமருங்கள்' என்று கூறி இடம் தந்தேன், அவரைப்பற்றி அவரிடம் கேட்டேன், அவர் என்னை நோக்கிச் சிரித்தவாறே, "எதையோ எண்ணி மனம் குழம்பி கவலை மிகையாகி என்னைத் துன்புறுத்தவே வீட்டைவிட்டு வெளியேறினேன். அன்று மழையில் நனைந்துகொண்டு வந்தவன் உன் வீட்டின் எதிரே வந்ததும் விழுந்துவிட்டேன். தாயன்பு மிக்க உன் அன்னை காத்திராவிடில், ஒருவேளை மாண்டிருப்பேன். இங்கே உன் வீட்டுச் சூழ்நிலை கண்டு, ஓரளவு கவலைமறந்து இருக்கின்றேன், உன் வாழ்க்கையைக் கேட்டு மிகமிக துன்புற்றேன்" என்றுர். இடையே அன்னை உணவருந்த அழைக்கவே, உணவருந்திேனும், உறங்கினேம்.

உறக்கத்தின் பின் திடீரென்று பேச்சுக் குரல் கேட்கவே திடுக்கிட்டு எழுந்தேன். அன்னை, அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தார். அவரை நோக்கினேன்; அவர் உறங்கியவாறே பேசிக்கொண்டிருந்தார், "இரக்கமற்ற உலகம்; நேர்மையற்ற சமுதாயம்; வறுமைத் தத்துவம்; வாழவைக்காத எழுத்து; என்ன உளநோய்" என்றெல்லாம் கூறினுர், எனக்கு ஒன்றும் விளங்கவே இல்லை. 'அமைதியைத் தேடி அலைந்த நான் கண்டதென்ன? அன்பைக் கண்டேன்; மாசு மறுவற்ற அன்பைக் கண்டேன். ஆனுல் அந்த அன்பு உள்ளத்திலும் அமைதி இல்லாததைக் கண்டேன். வலிய உள்ளம் படைத்த என் நிலையே ஈதென்றுல், மென்மை உள்ளங்கள் என்ன பாடுபடும்?" என்று உணர்ச்சி ததும்ப உறக்கத்தில் பேசவே, என்னை அறியாமல் அவரது கையைப் பிடித்து உலுக்கினேன். அவரும் திடுக்கிட்டு எழுந்தார், என் நிலையையும் அவரது செயலையும் எண்ணிக் கண்களில் நீர் சிந்தினுர். என்னை நோக்கி, "உறக்கத்தைக் கெடுத்துவிட்டேன், மன்னியுங்கள்" என்று கூறி வெளியே சென்றுர், உறங்காத நானும் வெளியே வந்தேன். தலையில் கைவைத்து அவர் அமர்ந்திருந்தார். நானும் அவரது அண்மையில் அமர்ந்து, அவர் கைகளைப் பிடித்தவாறே "ஏன் உங்களுக்கு இந்த நிலை உண்டாயிற்று. உங்கள் உள்ளம் அவலத்தில் துன்புறுகிறது என்பதை நான் அறிவேன். என் உள்ளம் மட்டும் மகிழ்விலா இருக்கிறது? உங்கள் உள்ளத்து வேதனையைத் திறந்து சொல்லுங்கள்" என்றேன். இவ்வளவு துணிச்சல் எங்கிருந்துதான் எனக்கு வந்ததோ! உண்மையில், அவரை நான் உளமார விரும்பினேன். என் உள்ளத்தில் அவரைச் செதுக்கிவிட்டேன். அதை அழிக்க எவராலும் முடியாது.

அவர் என்னை நோக்கி "என் கவலைகள் என்னேடிருக்கட்டும். தயவுசெய்து இதுபற்றி மீண்டும் வற்புறுத்தாதீர்கள்." என்று கூறவே, அவரது கைகளிலிருந்து என் பிடியை தளர்த்தி எழுந்தேன், என் கண்களிலிருந்து வழிந்த நீர் அவரது கால்களில் படிந்தது, உடனே அவர்

தலையைத் தூக்கி என்னை நோக்கினார். பின் தலையைத் தாழ்த்திவிட்டு, மெதுவாக நடந்து உள்ளே சென்றார். நானும் அன்னைக்கு அருகில் சென்று உறங்கிவிட்டேன்.

நான் அவருடன் நெருங்கியே பழகினேன். அவர் அவ்வண்ணமே இருந்தார். அவரது பேச்சுக்கள், செயல் முறைகள் முதலியவற்றால் எனக்காகவும் ஏதோ செய்துகொண்டிருக்கிறார் என்று அறிந்தேன்,

பள்ளியில் அமர்ந்திருந்தேன். குழந்தைகள் பாடம் படித்துக்கொண்டிருந்தன. என் எண்ணங்கள் யாவும் வீட்டையே சுற்றிக்கொண்டிருந்தன, பள்ளிப் பணியாளர் வந்து, தலைமையாசிரியை அழைப்பதாகக் கூறவே அவர் அறையை நோக்கிச் சென்றேன், அங்கே, எனக்காக 'வேலை உயர்வும் ஊதிய உயர்வும்' பற்றிய செய்தி காத்திருந்தது. அச்செய்தி என் அன்னையை மிகவும் மகிழ்வூட்டும். அன்று விரைவாகவே வீடு திரும்பினேன். வீட்டில் அன்னை மட்டும் இருந்தார். அவரைப்பற்றி வினவினேன். வெளியே சென்றிருப்பதாகக் கூறவே நூலொன்று வைத்துக் கொண்டு படிக்கத் தொடங்கினேன்.

திடீரென்று சிறிது நேரத்தின் பின் வெளியில் ஏதோ குரல் கேட்கவே வெளியே சென்றேன், அங்கே மருத்துவமனை வண்டி என் வீட்டிற்கு அருகில் நிற்கக் கண்டு திடுக்கிட்டேன். அருகில் சென்று பார்த்தேன், அவரைத்தான் இறக்கிக் கொண்டிருந்தார்கள். உடல் பூராவும் கட்டுக்கள், வந்தவர்களில் ஒருவன் 'ஒரு சிறு பையைக் கொடுத்தவாறே ''பலத்தஅடிபட்டார். பிழைப்பது அரிது''என்று கூறவே, பெருத்த குரலில் அலறிவிட்டேன். உடனே, அம்மாவும் நானும் அவரை வீட்டிற்குள் படுக்கவைத்தோம், கூட்டம் கலைந்தது. என் கண்கள் அருவியாகி அவரது உடலை நனைத்தன, அவரது இளமையான உதடுகள் துடித்துக்கொண்டிருந்தன, மெல்லத் தன் கண் திறந்து பையை நோக்கினார், விரல்களால் அப்பையைப் பிரித்துப் படிக்கச் சொல்லவே, நானும் பிரித்தேன். அதில் ஒரு கடிதமும், சிறிது பணமும் இருக்கக் கண்டேன். கடிதத்தில், ''இரக்கமுள்ள உங்கள் நெஞ்சம் வாழ்க. நீங்கள் என்னை விரும்புகின்றீர்கள் என்பதை நான் அறிந்தேன். ஏற்கனவே புண்பட்ட உள்ளத்தோடு வாழ்கின்றீர்கள். இந்நிலையில் என் துணையைப் பெற்று என்ன நலம் காண்பீர்கள். ஆகையால் நான் தங்களிடமிருந்து பிரிவது சாலச் சிறந்தது என்ற முடிவிற்கு வந்தேன், இக்கடிதத்தை மருத்துவ மனையிலிருந்துதான் எழுதவைத்தேன். சிறு சிறு உழைப்புக்களால் பெற்ற பணமும் இத்துடன் வைத்துள்ளேன். என்னைப் பலநாளும் பெற்ற தாயைவிட கண்ணும் கருத்துமாகக் காத்த உங்கள் அன்னையை மறக்கவே முடியாது, வணக்கம்.'' படித்தபின் அவரை நோக்கினேன், சிரித்த முகத்தோடு இருந்தார். ஆனால், கண்களைத் திறக்கவில்லை. மெதுவாக அழைத்தேன்.; பேச்சில்லை, கூர்ந்து நோக்கினேன். உதட்டில் துடிப்பு இல்லை; கைகளிலும் துடிப்பு இல்லை. அவர் எந்த அமைதியைக் காணவேண்டும் என்று கருதினாரோ அந்த அமைதியைக் காணச் சென்றுவிட்டார். தாங்க முடியாத—சொல்லமுடியாத வேதனை அடைந்தேன். என் அன்பிற்கு அமைந்த ஒரு துணையும் போய்விட்டதே என்றழுதேன். ஒருவாறு அவரை அடக்கம் செய்தோம். என்னுடைய இச்செயல்களைக் கண்டு அக்கம் பக்கத்தார் பலவாறு பேசினர். காய்ந்த நெஞ்சத்தினரான அம்மக்கள் எதைத்தான் தவறாகக் கொள்ளாமல் விட்டுவைத்தனர்? ஒருநாள் மாலை புதியவராய் வந்த அவரைக் கண்டேன்; ஒருநாள் மாலை அவர் என்னிடமிருந்து பிரிந்து செல்லக் கண்டேன், ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதேனும் துன்பம் இருக்கலாம், ஆனால் எனக்கு மாலைவேளைத் துன்பமே பெருந்துன்பம். மாலை வேளையே பிரிவுக்கான வேளை, என் அன்பின் பிரிவுக்கும் மாலை வேளையாக அமைந்தது. மீண்டும் என் கடந்த கால வாழ்க்கைக்கு நான் இழுத்துச் செல்லப்பட்டேன். என் அவலக்குரல் ஒலித்துக்கொண்டிருந்த ஒரே ஒரு உள்ளமும் மறைந்ததால் துன்ப வெள்ளம் எழுந்தது. நானும் அவரைப் போலவே, அமைதி காண்பேன்என்று உணர்கிறேன். நாளும் பள்ளிக்கூடம் போகத்தான், செய்கிறேன். இதோ மீண்டும் குழந்தைகள் நடுவில் செல்கின்றேன். குழந்தைகள் என்னை நோக்கி மீண்டும் மீண்டும் புன்முறுவல் செய்கின்றனர். அன்னை வழக்கம்போல் ஆறுதல் மொழிகள் கூறுகின்றார். ஆனால், அவரது கல்லறையும், அவரது அன்பும் தவிர, என் அவலக்குரலைத் தீர்க்க வேறென்ன இருக்கிறது,

பரிசுப்போட்டியில் 2-ஆம் பரிசுபெற்ற கட்டுரை.

# தமிழில் அறிவியல் நூலாக்கம்

நா தண்டபாணி

வையம் தோன்றிய அன்றுதொட்டு இன்றுவரை வாழ்க்கைநிலை ஒரே நிலையாக இல்லை, அது மாறியும் பிறழ்ந்தும் வளர்ந்தும் குறைந்தும் ஏறியும் இறங்கியும் வந்துகொண்டேயிருக்கின்றன. இங்ஙனம் இயங்கி வருகின்ற வாழ்க்கை நிலையின்கண்ணே பெரும்பான்மையும் பழையன கழிந்தும் புதியன புகுந்தும் புரட்சிநிலை தோன்றியும் வந்தவண்ணமேயுள்ளது. எனினும் பழையன கழிதலின் விரைவைவிட புதியன புகுதலின் விரைவு மிகுந்திருக்கின்றது. வாழ்க்கைப் போராட்டத்தின்கண் நலிவும் மெலிவும் உள்ளவை படிப்படியே அழிந்தொழிய வலிவுள்ளவைமட்டுமே தங்கும். உணர்வுக்கும் அறிவுக்குமுள்ள போராட்டமே வாழ்க்கையை நடத்திச் செல்கின்றது என்று சொல்லிவிடலாம்.

அழிவும் ஆக்கமும் பெருமையுஞ் சிறுமையும் நன்மையும் தீமையும் கலந்து உலகில் நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் நல்லோரிடை என்றென்றும் வளம்பெற்றே நிற்கும். எனவே உலகில் எது நிகழினும் அது நம் மொழியில் நம் நாட்டில் எப்படி இடங்கொண்டுள்ளது என்று ஆன்றோர் ஆராய்ந்து நல்லன கண்டு மகிழ்வர், அல்லன கண்டு துடிப்பர்.

வருங்காலத்து மக்கள் வரலாற்று அறிவுப் பசியும் நாகரிக உணர்ச்சியுமாகிய இனிய உணவு வகைகளை ஆராய்ச்சி அகப்பையால் துழாவுங்கால் அதன்கண் ஏதும் இல்லையெனின் ஆற்றவொண்ணாத் துன்பம் எய்துவர். அன்னோரை ஏமாற்றாதவண்ணம் நல்ல பானையில் தூய உணவு வகைகளைச் சமைத்து வைக்கவேண்டியது நமக்கு இன்று ஏற்பட்டுள்ள இன்றியமையாத கடனாகும்.

அறிவு, உணர்வு இரண்டையும் வாழ்க்கையின் இருமுனைகளாக அல்லது அறிவைவிட உணர்வைச் சிறந்ததாகப் போற்றிவந்த எந்த நாட்டிலும் இன்றைய அறிவியல் சாதனைகளோ அறிவியல் நூல்களோ விளைந்து முகிழ்த்ததில்லை. பெருவீரனாக விளங்கிய நெப்போலியனின் மனம் அறிவினில் ஈடுபட்டதைவிட உணர்விலேயே பெரிதும் ஈடுபட்டுள்ளது. ஓமரின் இலியட், காவியத்தையும் வாளையுங்கொண்டு உலகத்தையே ஆட்டிப்படைப்பேன் என்று அவன் வஞ்சினஞ் சாற்றினான். வாள் தந்த வெற்றியிலும் நூல்தந்த அமைதியே அவனுக்குப் பெரிதும் உதவியது என்பதை வரலாறு கூறுகின்றது. அவன் காலத்தில் பிரான்சு நாடும் அவன் பிறந்த நாடும் இன்றுபோல் அறிவியல் எழுச்சியுடன் விளங்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. மாடசியா என்ற ஆங்கில மாது பிரெஞ்சுக்காரரைப் புறங்கட்டியோடும்படிப் போர் உடற்றிய காலத்தில் கையாண்ட கருவிகள் இன்றைய அறிவியற் சாதனைகள் அல்ல. நம் சிலப்பதிகாரத்தில கூறப்பட்ட போர்க்கருவிகளும் நுணுக்க வேலைப்பாட்டுடன் கூடிய பாதுகாப்பரண்களும்கூட அன்று இங்கிலாந்தில் இல்லை. எனினும் அந்நாடுகள் அன்றைய நிலையிலேயே இருந்துவிடவில்லை. மேலைநாடுகளின் அன்றைய நிலையில் நாம் இன்று இருக்கின்றோம். கருத்துச் செல்வத்தையும் பொருட்செல்வத்தையும் நாம் மேலை நாடுகட்கு வழங்கிய காலம் அது. இன்றோ நேர்மாறுதல் ஏற்பட்டுவிட்டது. 'உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லாத இயல்பின அல்லவா? இதனால் நாம் பெரிதும் கவல வேண்டியதில்லை.

வாழ்க்கையில் நமக்கு வேண்டிய பொருள்களை நாமே ஆக்கிக்கொள்வது சிறப்பு. ஆயினும் இது என்றும் யார்க்கும் எங்கும் நடக்கக்கூடியதல்ல. ஆகவே தேவையானவற்றை வாங்கிக்கொள்ளுகின்றோம். விளைபொருள்களும் ஏனைய இன்றியமை

யாத பல பொருள்களும் ஓரேயிடத்தில் விளைவதில்லை, கிடைப்பதில்லை. எனவே தேவை நிறைவு பெற அவை இடமாற்றம் பெறுகின்றன. இம்முறையிலேயே நாமும் உள்ளவரிடமிருந்து அறிவியற் செல்வத்தையும் பெற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதோடு நாமே அறிவியல் சாதனைகளை ஏற்படுத்தும் திறனும் கைவரப்பெறல்வேண்டும். இதற்கு முதற்படி அறிவியல் நூல் ஆக்கம் அல்லவா?

அறிவியல் நூலாக்கம் வெற்றிபெற நாம் கைக்கொள்ளவேண்டிய விதிகள் மிகுதி, இவற்றில் நாம் விழிப்பாயிருக்கவேண்டும். அப்பொழுதுதான் இப்பணியில் நம் குறிக்கோள் நிறைவுபெறும். எல்லோரும் அறிவியற்கலை பயிலல் வேண்டும். இதன்பின்னர் ஏனைய கலைநூற்களை அறிவியல் முறையில் ஆராய்ந்து உண்மைகண்டு உலகோர்க்கு அறிவுறுத்தவேண்டும். இம்மூன்று நிலைமைகளும் முற்றுப்பெறுதற்கு உதவும் அறிவியல் நூல்கள் தமிழில் இன்று இருக்கின்றன. எனினும் அவை போதுமான அளவில் இல்லை. தமிழில் 'வீட்டு வைத்தியம்' 'குழந்தை மருத்துவம்', 'வானொலி', 'அணுவின் கதை' 'வானக்கலை', 'மக்கள் நூறாண்டுயிர் வாழ்க்கை', 'தொலைவில்உணர்தல்', 'யோகநித்திரை' 'ஆரோக்கிய இரகசியம்', 'தமிழ் மருந்துகள்' 'சித்தவைத்தியமும் இயற்கை வாழ்வும் முதலிய நூல்கள் இன்று ஆங்கில அறிவுபெறாத பொதுவான தமிழறிவுபெற்ற மக்கட்கு அறிவியல் திறனையூட்டிப் பயனடையச் செய்கின்றன. இத்தகைய நூற்களை எழுதியோர் பலதிறப்பட்டவராவர். - தமிழுலகம் சிறப்பாக அவர்கட்கு நன்றிக்கடன்பட்டிருக்கின்றது. அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் மறைமலையடிகள் கி. ஆ. பெ. விசுவநாதம் ஈ. த. இராசேசுவரி அம்மையார், இராசம்மாள் தேவதாசு, T. S. S. இராசன். குமாரசாமி, பொ. திருகூடசுந்தரம், வேங்கடசாமி, நவநீத கிருட்ணன், பெ. நா. அப்புசாமி, R. K. விசுவநாதன், முதலியவராவர். தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தார், மாடு, குதிரை, யானை, ஆடு, மான் முதலியவற்றின் இலக்கணமும் மருத்துவமும் அடங்கிய பழைய நூல்களை வெளியிட்டுள்ளார்கள். இத்தகைய தொண்டு செய்யும் பல நிலையங்கள் உண்டு. அறிவியற் செல்வத்தை நல்ல தமிழில் தருகின்ற பணியைச் செய்யும் 'கலைக்கதிரை' நாம் மறக்கமுடியாது. இன்னும் பல இதழ்கள் இத்தகைய பணிசெய்தல் வேண்டும். ஆங்கிலத்தில் உள்ள 'Science Digest' போன்ற இதழ்கள் தமிழில் நிறைய வெளிவரல் வேண்டும். தென்னாட்டு மொழிநூற்குழு அறிவியல் நூற்களை வெளியிடுகின்றதாயினும் அவை நல்ல தமிழிலே இல்லை நல்ல பாலாக இருந்தால்மட்டும் போதுமா? அது தூய்மையான கிண்ணத்தில் தரப்பட வேண்டும். தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிடுகின்ற கலைக்களஞ்சியங்கள் அறிவியற் செய்தியை நன்கு கூறுகின்றன. எனினும் ஒருசில மாற்றங்கள் தேவை.

இப்பொழுதுதான் நாம் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டுவன உள்ளன. மேனாட்டார் சமைத்த உணவை அப்படியே உண்பதுபோன்றது மேலைநாட்டு அறிவியல் நூலை (மூலத்தை)க் கற்றறிதல். நம் நாட்டு அரிசி, கீரை முதலியவற்றை நாம் சுவைபடச் சமைத்து இலையில் பரிமாறி உண்பதுபோன்றது நாமே அறிவியல் உண்மைகளைக் கண்டுபிடித்துத் தமிழில் எழுதி வெளியிடுதல். மேனாட்டு பச்சை உணவுப் பொருள்களை வாங்கி நம் நாட்டுச் சுவைப்பொருளூட்டி நாமே சமைத்துண்பது போன்றது மேலைநாட்டு நூல்களை மொழிபெயர்த்து அறிவு பரப்புதல். மேனாட்டில் சமைத்த மேனாட்டுணவு எல்லோர்க்கும் கிடைக்காது என்பதுமட்டுமல்ல, அதை எல்லோரும் விரும்பவும் மாட்டார்கள். ஆனால் சொந்த நாட்டில் உணவுப்பற்றாக்குறை காரணமாக நாம் பச்சைஉணவுப்பொருளை வாங்கிச் சமைத்து உண்ண வேண்டியவராயிருக்கின்றோம். பற்றாக் குறைக்காக இரந்துண்ணும்போதே சொந்தநாட்டிலும் உணவுப்பொருளை மிகுதியாகப் பயிரிட வேண்டியது கடமையல்லவா? மொழிபெயர்ப்பு அலுவல் நிகழ்ந்துகொண்டிருக்கும்போதே தனித்தமிழ் மூலநூற்களிலும் ஆக்கம் செலுத்தி வருதல் இன்றியமையாததாகும்.

அறிவியல் நூல் மொழி பெயர்ப்பு எளிதான வேலையன்று. மூல நூலும்

பெயர்ப்பு நூலும் ஆகிய இரண்டு நூல் மொழியினருஞ் சேர்ந்தே மொழிபெயர்க்க வேண்டும். ஆசிரியர்கள் நூல்களைத் தழுவல் படைப்பாக்காது உழைத்துத் தூயபடைப் பாக்க மடிதற்றி முன்வரல் வேண்டும். மொழி பெயர்க்குங்கால் மூலத்தில்உள்ள சொற்களை அப்படியே தமிழில் பெய்தல் நேரிதன்று. 'Asoka stopped the stone pillars' என்று 'அசோகன் கற்றூண்களை நிறுத்தினன்' என்பதற்கு மொழிபெயர்த்தார் ஒருவர். 'Asoka erected the stone pillars' என்று அது இருத்தல் வேண்டும். அறிவியலில் இத்தகைய மொழிபெயர்ப்பு அமைந்தால் பொருள் மாறுபட்டுவிடும் என்பதில் ஐய மில்லை.

மணிப்பிரவாள நடையினால் ஏற்படும் தீமையை விளக்கி, 'எந்த ஒரு கருத்தையும் தூய தமிழில் எழுதமுடியும்' என்று மார் தட்டிக் கூறினார் மறைமலையடிகள். சொன்ன தோடுமட்டுமின்றி தாம் எழுதிய நூல்களை யும் அங்ஙனமே படைத்தார். தூசும் தும்பு மாகி அழுகற் பொருள்களால் கெட்டுக்கிடக் கும் தென்னகத்தைத் தூய்மைசெய்ய இத் தகைய அறிவுக்கதிரவன்கள் பல தோன்ற வேண்டும். அப்பொழுதுதான் எட்டுத் திக்குஞ்சென்று கலைச்செல்வம் யாவும் கொணர்ந்திங்கு சேர்க்கமுடியும். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்க்க முடியும். 'வீடுதோறும் கலையின் விளக்கம் ஒளிராநிற்கும். படிப்படியாக அறி வியல் மலர்ந்து விளங்கும். இந்நிலையில்தான் அறிவியல்நூல் முகிழ்க்கும். 'மெல்லத் தமிழ் இனிச் சாகும், புத்தம்புதிய கலைகள் பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்' அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.; "சொல்லுந் திறமை தமிழ் மொழிக்கில்லை" என்று கூறத் தகாவற்றை எந்தப்பேதையும் உரைக்கமட்டான்.

நாம் நம் பணியை மேற்கொண்டு செல் லுங்கால் விரைந்துசெல்ல வேண்டியிருப்பி னும் கலைச்சொல்லாக்கத்தின்கண் மிகுந்த அக்கரை செலுத்த வேண்டும். வேற்றுமொழி கள் பலவற்றுள் வரும் பொதுக்கலைச்சொற் களை (International Technical Terms) அறிந்திருப்பின் எம்மொழியிலும் வரும் அறிவியலை அறிய முடியும். புதிய கலைச் சொற்கள் பயன்படுத்தப்படும்போது முதலில் அதை ஆங்கிலத்தில் எழுதியபின்னர் அச்சொல் வருந்தோறும் அவற்றைத் தமிழி லும் எழுதுதல் சிறந்தது. வங்காள மொழி யில் சகதீசசந்திரபோசும் பிறரும் இம்முறை யைக் கடைப்பிடித்துள்ளதாகக் கூறப்படு கின்றது.

விருப்பப் பாடமாக அறிவியல் பயில் வோர்மட்டுமே கூர்த்த சிறப்பறிவு பெறமுடி கின்றது. ஏனையோர்க்குக் கிட்டுவதுபொது அறிவுமட்டுமே இவர்கட்குத் தாய்மொழி யில் அறிவியல் முற்றிலும் கற்பிக்கப்படுவ தில்லை, 1834ல் இந்திய நாட்டு மொழிக ளில் (இந்தியாவைப்பொறுத்தவரை) அறி வியல் கற்பிக்கப்படலாம் என்று அரசினர் பால் இருந்த எண்ணம் வாக்கெடுப்பில் ஒரு வாக்குக் கூடியதால் பாடமொழி (Medium of language) ஆங்கிலமாயிற்று. தொடக் கத்திலிருந்து தாய்மொழியில் கற்றல்எய்தும் அறிவு சிறப்பாயிருப்பதோடு தாய்மொழி யில் அறிவியல் நூலாக்கம் இன்னும் சிறக்கு மென்பதில் ஐயமில்லை.

நாடும் மொழியும் இரு கண்கள். அறி வியல் ஆக்கவேலை மொழியியலில் இணைந்து நூலாக்கம்பெறுகின்றது. அறிவியல் முறை யில் மொழிக்கும் நாட்டுக்கும் உள்ள தொடர்புநூலாக்கத்தில்தான்முகிழ்க்கின்றது. இங்கு நம்முடைய கடன் இழந்த கண்ணையும் பெற்று இருப்பதையும் காத்து இரண்டினை யும் மேலும் ஒளிபெறச் செய்வதாகும். அறி வியல் நூலாக்கம் மூன்றினையும் செய்து நிறைவேற்றுவது! அது செவ்விய முறையில் அமையாவிடில் 'கன்னித்தமிழ்' என்ற பெயரை நம்மொழி இழந்துவிடும். பழி நீங்கிய புகழ் அடையவேண்டின் மன்னுவுல கத்தில் மன்னுதல் பெறவேண்டின் கொண்ட கடமையை இனிதே முடிக்கவேண்டும்.

"அறிவியல் சிறந்திருக்குமிடத்தில் அன்பு தழைக்காது. அன்பு தழைத்த இடத்தில் அறிவியல் வேர்க்கொள்ளாது" என்ற கூற்றி னைப் பொய்ப்பித்து இரண்டும் தோழமை யுற்ற இணைப்புத் தலைமுறை ஒன்றை உல கோர் வியக்கும்வண்ணம் நாம் உருவாக்கு வோம். அதற்கு முன்னோடியாய், அடை யாளமாய் தமிழில் அறிவியல் நூல் ஆக்கப் பணியில் நாம் நம்மைச் செவ்விய முறையில் ஈடுபடுத்திக்கொள்வோமாக!

பாவையின் பார்வைக்கு வந்த ஏடுகள்.

"அருளன்"

# திறனாய்வு

## அருட்செல்வர்
## புதையல் தீவு
## குருசோவின் அலைமேற் செலவு
## மேழிச் செல்வம்

முதல் மூன்று நூற்களும், முறையே ஆலிவர் கோல்ட் சுமித், இராபர்ட்லூயி ஸ்டீவென்சன், தானியேல் டீபோ ஆகிய முப்பெரும் எழுத்தாளர்களின் சிறந்த படைப்புக்கள். இப்படைப்புக்களை அழகு தமிழில் மூலச் சுவை குன்றாது இனிமை கலந்து எழுதியுள்ளார் ஆசிரியர்; மேழிச் செல்வம் நம் நாட்டு உழவுத் தொழிலுக்கேற்ப ஆறுவகையாகப் பகுத்து எழுதியிருப்பது போற்றற்குரியது. இவைகள் மாணவர்களுக்கென எழுதியிருப்பினும் இவைகளிலடங்கிய கருத்துச் செறிவுகளும் கதைக் 'கரு'க்களும் அனைவர்க்கும் பயன்பெறத்தக்கன.

ஆக்கியோன்:
வித்துவான் மு. இராமகிருட்டினன்,
எம்.ஏ.,பி.டி.

வெளியிட்டோர்:
யுனைட்டெட் பப்ளிஸர்ஸ், திருச்சி-2.

## வள்ளல் விநோபாவின் வரலாற்றுக் காவியம்

ஏழ்மையையும் எளிமையையும் தன்னகத்தே கொண்டு வாழ்ந்துவரும் பெரியார் விநோபாவின் வாழ்க்கை விளக்கம் இக்கவிதை நூல், எளிய இனிய கவிதை நடையில் நூறு பாக்கள் புனைந்துள்ளார் இதன் ஆசிரியர். "தளர்நடை பயின்றபோதும்......"என்று தொடங்கும் கவிதைப் பகுதி மிகவும்சிறப்பாக அமைந்துள்ளது.

ஆசிரியர்:
வித்துவான் சொ. அரியநாயகம்,
தே, கல்லுப்பட்டி.
வெளியிட்டோர்:
சர்வோதய பிரசுராலயம், தஞ்சை.

## அரும்பு

தமிழ்நாடு கடந்து வாழும் பம்பாய்த் தமிழ் மாணவர் மன்றத்தார் அரிய முறையில் அரும்பை வெளியிட்டுள்ளார்கள். ஓவியம், பேச்சு, சொற்பயிற்சி, கதை, கட்டுரை, பாட்டு, நாடகம் தீட்டுதல்போன்ற நற்பணிகளில் மாணவர்களை ஊக்குவித்துவரும் இம்மன்றத்தாரின் தமிழ்த்தொண்டை உளமாற பாராட்டவேண்டும். அரும்பு முழுதும் நல்ல தமிழையே கையாண்டிருப்பது, இது அரும்பு அல்ல தமிழ் மணம் கமழும் கவின் மலர் என்றே கூறலாம்.

பம்பாய்த் தமிழ் மாணவர் மன்றம்'
19, முதல் மாடி, அமீனு மன்சன்,
பம்பாய்-17

## இளமைக் கனவு

இளமைக் கனவு வானவில்லைப்போன்றது என்பதை நல்ல தமிழில்-நல்ல 'நடையில்-இப் புதினத்தைப் படைத்துள்ளார் ஆசிரியர் பொன்மாரி அவர்கள், கதைக்கு ஒட்டிய கருத்துக்களை ஆங்காங்கு கூயிருப்பது புதினத்தைச் சிறப்பிக்கின்றது. பழையனவாகத் தோன்றும் சில உவமைகளை ஆசிரியர் மாற்றியிருக்கலாம். எனினும் ஆசிரியரின் தொண்டுள்ளத்தை இம் முதல் படைப்பிலேயே நாம் உணர முடிகின்றது.

ஆசிரியர்: "பொன்மாரி"
மீனாட்சி புத்தக நிலையம்,
மேலக்கோபுரத் தெரு, மதுரை-1.

## நாயக்கர் மக்கள்

மதுரையிலிருந்து வெளிவருகின்றது இத் திங்கள் ஏடு. நாயக்கர் வழித்தோன்றல்களுக்காக வெளியிடப்பெறும் இதழ் எனபதை அறிகிறோம். நாட்டில் ஆட்சி செய்த நாயக்கர் மன்னர்களின் நற்செயல்களையும், நாட்டுக்குப் பணியாற்றிவரும் பெரியார்களின் வரலாற்றுக்களையும் வெளியிட்டு வருவது சிறப்புக்குரியது, பாராட்டுக்குரியது. இதன் ஆசிரியர் அவர்கள் நல்ல தமிழை வரவேற்க வேண்டும் என வேண்டுகிறோம்.

ஆசிரியர் : கோவிந்தசாமி (நாயுடு)
26, வடக்குச்சித்திரை வீதி, மதுரை-1.

# மன்றச் செய்தி

நமது மன்றத்தின் சார்பில் நடைபெற்ற சீனப் படையெடுப்பின் கண்டனக் கூட்டம் 23—12—62ஆம் நாள் காலை 10-30 மணியளவில் புலவர் மு, இராமகிருட்டிணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தமது உரையில், "இந்தியாவில் பொதுவுடைமைக்கொள்கையைப் பரப்புவதே சீனவின் உண்மையான உள்நோக்கமாகும், தமது எண்ணத்தைச் செயலாக்கிய முதல்நிலை தான் எல்லைப்போர். வலிமையால் அமைக்கப் படுவதே அரசு. இந்திய அரசு தனது வலிமையைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய கவிஞர் கதி. சுந்தரம் அவர்கள், இந்தியா சீன எல்லைப்போர் என்று கூறுவதைவிட கொள்கைப்போர் என்று கூறுவதே தகும் என்று விளக்கிப் பேசினர். அதன் பின்னர் பேசிய புலவர்மணி தி, கி. சுந்தரமூர்த்தி அவர்கள் தமது உரையில் சீனப்படையெடுப்பால் இந்தியாவிற்குப் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளனவென்றும், நமமுடைய வீர உணர்ச்சி எழுச்சிபெற்றுள்ளது என்றும் கூறினர்.

இறுதியில் பேசிய புத்தனேரி ரா. மதிவாணன் அவர்கள் "சீனத்தலைவர்கள் 1956-57 லேயே இந்திய சீன எல்லை குறித்துக் கையெழுத்திட்டு ஒப்புக்கொண்ட முடிவை இப்போது மறுக்கிருர்கள். நன்றிகெட்ட சீனர்கள் மீண்டும் தாக்கினல் ஒன்றுபட்டு எதிர்த்துப் போரிட்டு விரட்டவேண்டும்," என்று குறிப்பிட்டார்.

அதன்பின்னர் செயலாளர் புலவர் வேலவன் அவர்கள் மன்றத்தின் புதிய உறுப்பினர்களாகிய திரு. எம். கான்முகமது, திரு. மருதூர் இளங்கண்ணன், சே. சின்ன ஆகியோரை அனைவர்க்கும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

இறுதியில் துணைச் செயலாளர் திரு. சுப. சந்தானம் அவர்கள் நன்றி நவிலக் கூட்டம் இனிது முடிவுற்றது.

# மன்ற நிகழ்ச்சி

மன்றத்தின் சார்பில் பொங்கல் விழாக் கூட்டம் 20—1—63 ஞாயிறு காலை 10 மணிக்கு நியூசினிமாவுக்கு அருகிலுள்ள சௌராட்டிரா நடுநிலை உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும்.

தலைவர்:—திருமதி தே. தியாகராசன், எம். ஏ.,

பேசுநர் ;—டாக்டர் திருமதி. லலிதா காமேசுவரன் எம். ஏ.,

திருமதி. இரகுபதிசுவாமிநாதன், எம். ஏ.,

அனைவரும் வருக! சிறப்புத் தருக!

# நூல் வெளியீட்டு விழா

நமது எழுத்தாளர் மன்ற உறுப்பினரும், தொழிற் பெரியார் ஜி. டி. நாயுடு அவர்களின் சிறந்த மாணவருமான திரு, கான்முகமது அவர்கள் எழுதிய 'மின்சாரம்' என்னும் நூல் வெளியீட்டு விழா 30-12-62 ஆம் நாள் மாலை 5 மணியளவில் மதுரையில் நடைபெற்றது,

அவ்விழாவிற்குத் தமிழ்பாவை ஆசிரியரும் மன்றச் செயலாளரும் வேறு பல பெரியார்களும் கலந்து கொண்டனர்.

# மன்றப் புதிய உறுப்பினர்கள்

1. திரு. எம். கான்முகமது, பி. ஏ.
முதல்வர்,
தொழிற் கல்லூரி
39-41, டவுன்ஹால் ரோடு,
மதுரை—1
2. ,, மருதூர் இளங்கண்ணன்
எம். ஓ. எல்,
ஆசிரியர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி,
டி. கல்லுப்பட்டி,
மதுரை மாவட்டம்.
3. ,, சே, சின்ன,
14, காசிமார் தெரு,
மதுரை.
4. ,, சு. இராமச்சந்திரன்,
2/63 பேச்சியம்மன் கோவில்தெரு,
வைரவர் செட்டியார் பகுதி
மதுரை—1

ஆசிரியர்—வெளியிடுபவர்;—பு, மனோகரன், 247, கீழமாசி வீதி, மதுரை—1.

அச்சிடுபவர்:—சு. பிச்சையா, மேலாளர், சௌத்இந்தியா பிரிண்டிங் ஒர்க்ஸ், மதுரை—1.